# குறுந்தொகைச் சுட்டும் தனி நிலை உவமைகள்

- முனைவர். ம.வனத்தையன்*



## முன்னுரை:

ஒரு பொருளின் தன்மையைப் புலப்படுத்துவது உவமையாகும். அதாவது ஒப்புமை அறிதற்குக் காரணமாய் நிற்கம் பொருளை உவமை என்பது வழக்கம். இவ்வுவமை ஒவ்வொரு கவிஞனின் அனுபவப் பொருளாகவே வெளிப்படும். இதன் மூலம் அவன் தன்னுடைய படைப்பில் படைத்துக்காட்டக்கூடிய பொருளின் உயர்வு தாழ்வுகளை அளந்து அறிவிக்கிறான். அவ்வாறு அறிவிக்கும் போது அவன் காட்ட விழைந்த பொருளை உயர்ந்த பொருளாகவேத்தான் படைத்துக்காட்டுவான். அவ்வாறு படைக்கும் போது தான் அது சிறந்த உவமை நலன் பெறும். ஆசிரியர் தொல்காப்பியனாரது கருத்தும் இதுவே.

"உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை"

-- தொல்.சூ.274

உவமைகள் பெரும்பாலும் அவ்வக்கால மரபினுக்கு உடையதாகவே உணர்த்தப்படும். புலவர்களும் இம்மரபுகளைக் காலம் காலமாகப் போற்றியும் வந்துள்ளனர். இதில் ஒரு சில உவமைகள் புலவர்களின் தனிப்படைப்பாகவே அமைந்து விடுவதும் உண்டு. அவ்வாறு அமையக்கூடியன அப்புலவர்களின் சொல்லாற்றலைப் புலப்படுத்தி நிற்பதோடு அவர்களை நன்கு அடையாளம் காட்டவும் செய்தன. இதனால் புலவர்களது இயற்பெயர் மறைந்து அவர்கள் எடுத்தோதிய உவமையே அவர்களுக்குப் பெயராக நிலைத்தும் போயின. போற்றுதற்கரிய இத்தகைய உவமைகளை வேறு எந்தப் புலவர்களும் கையாளவும் இல்லை. எனவே இதன் சிறப்பு கருதி இத்தகைய உவமைகளை (புலவர்களை) விவரிக்க முயலுவதே இக்கட்டுரையின் நோக்கமாகிறது.

## ஓர் ஏர் உழவன(ரார்)

ஈரம் பட்ட செவ்வி பைம்புலத்து
ஓர் ஏர் உழவன் போல
பெரு விதுப்பு உன்றன்றால் நோகோ யானே

-- குறு 131.∴4 - 6

ஈரமுள்ள செம்மையானப் பசுமை நிறைந்த நிலத்தை உழ விரும்பும் உழவன் ஒருவன் ஒரே ஏர் மட்டும் வைத்திருக்கிறான். ஆனால், அவன் ஆர்வமோ பெரிதாக, அவனோ முழுவதும் செயல்படமுடியாத நிலைக் -குரியவனாகிறான். ஈரம் புலர்வதற்கு முன்பாக உழவைச் செய்துவிட ஒரேருழவன் விரைதலைப் போல, தலைவன் மனமும் பருவம் மாறுதவற்கு முன்பு தலைவியைச் சென்றடைவதற்கு விரைகிறது என்பதனைப் புலப்படுத்த இத்தகைய உவமை நலத்தை சுட்டி இருப்பது தனிச்சிறப்பு ஆகும். பல ஒருவடையவன் சிறிது சோம்பியிருப்பினும் ஏவலாளர் உதவி கொண்டு குறுகிய கால அளவில் உழுதுவிடக்கூடும். ஆனால், ஓரேர் உழுவனோ அவ்வேரைக் கொண்டு உழ வேண்டியவன் ஆகிறான். ஒற்றுமையில் அவனைப்போல நான் வருந்துகிறேன் என உவமைப்படுத்தி எழுதிய புலவரது இச்சிறப்பான சொல்லே அவருக்கு ஓரேர் உழவனார் என்ற பெயரைப் பெற்றுத் தந்திருக்கிறது. இது ஒரு புதிய உவமைப் படைப்பு என்றாலும் இதன் மூலம் சொல்ல வருகின்ற கருத்து, தெளிவு படுத்த நினைக்கின்ற சூழல் அதற்காகப் புலவர் கையாண்டுள்ள விதம் பாராட்டுக்குரியது.

## கங்குல் வெள்ள(த்தார்)

இப்பெயர், இப்புலவருக்கு அவர் கையாண்டுள்ள உவமையால் மட்டும் அமையவில்லை. உவமிக்கப்படும் பொருளாலும் இப்பெயர் சிறப்புப்பெற்றுள்ளது. தலைவன் பிரிந்த காலத்தில் தலைவி ஆற்ற வேண்டும் என்று வற்புறுத்திய தோழியை நோக்கி மாலைக்காலமும் யாமமும் எனக்குத் துன்பத்தைத் தருவன ஆயின என்று தலைவி கூறுவதைச் சுட்ட நினைத்த புலவர் பின்வருமாறு உவமை நான் வைத்து ஒரு பாடல் அமைத்துள்ளார்.

எல்லை கழிய முல்லை மலரக்
கதிர் சினமும் தணிந்த கையறு மாலை
உயிர் வரம்பாக நத்தினம் ஆயின்
எவன் கொல் வாழி? – தோழி
கங்குல் வெள்ளம் கடலினும் பெரிதே!

... குறு. 387.

இப்பாடலின் நோக்கம் தலைவனைப் பிரிந்து தணித்து வாழும் எனக்கு மாலைப்பொழுது கடந்து சென்றாலும் கங்குல் என்ற வெள்ளம் கடத்தற்கு அரியது என்று தலைவி கூறியவாறு பாடல் புனையப்பட்டுள்ளதால் இதன் எழில் நலம் கருதி கங்குல் வெள்ளத்தார் என்ற பெயரை இப்பாடல் ஆசிரியர் பெறுகிறார். கங்குல் என்பது வெள்ளமாக உவமிக்கப்பட்டிருப்பது இவ்வப்பாடலின் தனிச்சிறப்பு.

*Asst. Prof. and Head, Department of Tamil, St. Joseph's College of Arts and Science (Autonomous), Cuddalore - 1

### 3. கயம (னார்)

நெய்தல் மலர் நீரில் மூழ்கும் மகநிரின் கண்களைப் போல விளங்குகிறது என்று சொல்ல விழைந்த கவிஞர் கயம் என்ற இச்சொல்லோவியத்தை உவமையாகப் படைத்துக்காட்டி இருக்கிறார்.

இனமீன் இருங்கழி ஓதம் மல்குதொறும்
கயம் மூழ்கு மகளிர் கண்ணின் மாறும்

... குறு 9.∴4-6

நெய்தல் பூவானது கூட்டமாகிய மீன்களையும் நீர்ப்பெருக்கு மிகுந்துள்ள குளத்திலே மூழ்கி நீராட வரும் மகளிரின் கண்களை ஒத்திருக்கம் நீர்த்துரைக்குரிய தலைவனது பரத்தமைக்கொடுமையைத் தோழியராகிய எம்முன்னே சொல்லுதற்கும் நாணமுற்று மறைந்து உரையாடுகிறாள் என்று தலைவியின் பதிவிரதா தர்மத்தைத் தோழி எடுத்துரைப்பதாக அமைக்கப் பட்டுள்ள உவமை நலம் சிறப்பு வாய்ந்தது. இந் நலம் நோக்கி இவ்வாசிரியர் கயமனார் என்னும் பெயர் பெற்றிருக்கிறார்

### கல்பொரு சிறுநுரை (யார்)

யாம் எம் காதலர்க் காணோம் ஆயின்
செறிதுனி பெருகிய பெருநீர்க
கல்பொரு சிறுநுறை போல
மெல்ல மெல்ல இல்லாகுதும்மே

... குறு 290 ∴ 3 – 6

தலைவி தன் தலைவனைக் காணாவிட்டால் மிக்க தனிமையால் வரும் துன்பத்தால் கல்பொறு சிறுநுரை போல மெல்ல மெல்ல இல்லாமல் மறைந்து விட நேரிடும் என்று கூறுவதாக அமைந்த கூற்றில் மேற்கண்ட உவமை வெளிப்பட்டுள்ளது. இத்தனிக் காட்சி இப்புலவர்க்கே உரிய சிறப்பாக மின்னி நிற்கிறது. கவிஞன் எங்கோ எப்போதோ பார்த்த கல்லில் மோதுகின்ற சிறுநுரை இல்லாமல் போகிய இக்காட்சி அவர் நினைவில் வந்து நின்றுதான் சுட்டும் தலைவியின் உள்ளத்திற்கு உவமையாக அமைந்துள்ளது. இது தனித்ததோர் இலக்கிய சுவை மிக்கதாக இருப்பதால் இதன் சிற்பபின் காரணம் கருதி இவ்வுமையே இப்புலவருக்குப் பெயராக பொருந்தியிருப்பது தெளிவாகிறது.

### குறியிறை (யார்)

தலைவியின் ஆற்றாமையினைக் கண்டு, தோழி தலைவனின் இயல்பினைப் பழித்துத் தலைவியை நோக்கிக் கூறுவதால் பின்வரும் பாடல் அமைந்துள்ளது.

„ „ „ „ „ „ „ „ „ „ „ „ „ „ „ „ „ „ குறமகள் ஈன்ற
குறி இறைப் புதல்வரோடு மறுவந்து ஓடி
முன்நாள் இனியது ஆகி பின் நாள்
அவர் தினைப் புனம் மேய்ந்தாங்கு

... குறு. 394.

கரிய பிடியினது மெல்லிய தலையை உடைய யானைக்கன்று மலைப்பக்கத்து ஊரிலுள்ள குறமகள் வாழும் முற்றத்தின் கண் உள்ள அவன் பிள்ளைகளோடு சுற்றி ஓடி முற்காலத்தில் இனிமையைத் தருவதாக இருந்தது. பிற்காலத்தில் அதுவே அவர்களுடைய தினையை மேய்ந்தாற்போல் இருந்தது. அதுபோல் தலைவர் நம்மோடு முன்பு நகைத்து விளையாடியது இப்பொழுது பகைமையை உடையதாகின்றது. முன்பு இன்பத்தைத் தருபவர் போலத் தோன்றி விளையாடிப் பின் துன்பத்தை விளைவித்து வஞ்சித்தார் என்று இயல்பு பழித்து அமைத்து எழுதிய பாடலில் குறியிறை என்பது ஒரு புதிய உவமையாகவும் அமைந்துள்ளது.

### கூவல் (மைந்தனார்)

கிணற்று நீரில் பசுவின் கன்று ஒன்று தவறி விழுந்து அதனினின்றும் கரையேற முடியாததாய்ப் படுகின்ற துன்பத்தை இரா வேளையில் கண்ட ஊமையன் ஒருவன் அதனைப் பிறருக்கு அறிவித்துக் காப்பாற்றுவதற்கு இயலாதவனாய்த் துயரப்படுவான். அவன் படுகின்ற துன்பத்தைப்போலவே என் தோழியின் நோய்க்கு யானும் பொறுக்க இயலாத துன்பத்தை அடைகின்றேனே என்று தன் தோழி தன்பொருட்டு தவிக்கிறாா் என்று ஒரு தலைவி கூறுவதைப்பின்வரும் பாடல் சுட்டுகிறது.

கவலை யாத்து அவலந்த இடைச்
சென்றோர் கொடுமை எற்றித் துஞ்சா
நோயினும் நோய் ஆகின்றே கூவற்
குரால் ஆண் படுதுயர் இராவில் கண்ட
உயர்திணை ஊமன் போலத்
துயர் பொறுக்கல்லேன் தோழி நோய்க்கே

... குறு 224.

இப்பாடலில் பேசும் வாய்ப்பினைப் பெற்ற மனிதனும் ஊமையாக இருக்கும் நிலையைக் காட.ட உயர்திணை ஊமன் என்று கூறப்பட்டுள்ளவிதம் கவிஞர் தாம் சொல்ல வந்த உவமையை மேலும் சிறப்புடையதாக ஆக்குகிறது. கிணற்றின் (கூவற்) அருகே நிற்கும் மைந்தனின் செய்தியே உவமையாக வந்திருப்பது இப்பாடலில் தனி அழகினை ஏற்படுத்துவதோடு சிறந்த கருத்தாழத்தையும் தருவதால் இத்தொடர் நலம் கருதி இதனை வெளிப்படுத்திய புலவர் இப்பெயரைப் பெற்றுள்ளார்.

### செம்புலப் பெயல் நீரா(ரா)

தலைவனும் தலைவியும் உள்ளத்தால் ஒன்று ஆகினார். அவன் தம் நெஞ்ச ஒன்றாகக் கலந்த நிலையை வானத்தில் பெய்யும் மழைநீர் வையகத்தில் விளங்கும் செம்புத்தில் இயைந்து கலக்கும் நிலைக்கு உவமைப்படுத்துகிறார். எங்கோ பிறக்கும் நீர் எங்கோ உள்ள நிலத்தில் வந்து இயைவது முன்பின் உறவு அறியாத இவர் நெஞ்ச ஒன்றாகக் கலக்கும் உயர் நிலைக்கு உவமையாகி உள்ளது. செம்புலப் பெயல்நீர் என்னும் இச்சொல்லமைப்பு சொல்வதற்கும் கேட்பதற்கும் அழகாக அமைந்துவிட்டதால் இதன் தன்மை அறிந்து படைத்தப் புலவருக்கே பெயராக வைத்தழைத்து விட்டனர்.

செம்புல பெயல் நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே

...குறு 40 ∴ 4–6.

முடிவுரை:

1. உள்ளத்தின் உணர்வுகளுக்கு உருக்கொடுத்து அதனை இலக்கியமாகவும் வடித்து, அந்த உணர்வுகளுக்கு ஏற்ற களங்களை, (உவமைகளை) அதுவும் யாரும் பயன்படுத்த முன்வராத சொல் ஆற்றல்களை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி தாங்கள் சொல்ல வந்த கருத்துக்களைத் திறம்படக் கூறுவதில் வல்லவர்கள் சங்க காலப்புலவர்கள் என்பதனை மேற்கண்ட செய்திகளின் மூலம் தெளிவாகிறது.
2. சங்க இலக்கியங்களில் மிகுதியாக உவமை நலன்களே அடுக்கப் பட்டிருக்கின்றன என்பதை அறியமுடிகிறது.
3. இலக்கிய மாந்தர்களின் மனநிலைக்கு ஏற்ப உவமைகளைக் கையாள்வதில் சங்க புலவர்கள் ஆற்றல் மிக்கவர்கள் என்பதனை தெளிவாக உணரமுடிகிறது.
4. இலக்கியத்தில் புதியவைகளைப் படைத்துப் புதுமைகளை நிலைநாட்டுவதில் வல்லவர்கள் சங்கத்தமிழர் என்பதை மேற்கண்ட குறுந்தொகை ஆதாரணங்கள் வெளிப்படுத்துகின்றன.